உ

ஓம் குஹாயநம:

திருப்புகழமிர்தம்

"குருப்புகழை மேவுகின்ற கொற்றவன் ருள்போற்றுந்
திருப்புகழைக் கேளீர் தினம்''

மலர் 18 | விஜய ஆண்டு ஆனித் திங்கள் ஜூன்-1953 | இதழ் 3

திருப்புகழ்

பொது

காதி மோதி வாதாடு நூல்கற் றிடுவோருங்-
காசு தேடி யீயாமல் வாழப் பெறுவோரும்;
மாது பாகர் வாழ்வே யெனுநெக் குருகாரும்-
மாறி லாத மாகால னூர்புக் கலைவாரே;
நாத ரூப மாநாத ராகத் துறைவோனே-
நாக லோக மீரேழு பாருக் குரியோனே;
தீதி லாத வேல்வீர சேவற் கொடியோனே-
தேவ தேவ தேவாதி தேவப் பெருமாளே.

பதவுரை

நாதரூப – மந்திர ஒலிவடிவாக விளங்குபவரே! மா நாதர் ஆகத்து உறைவோனே – சிறந்த தலைவராகிய சிவபெருமானுடைய திருவுள்ளத்தில் உறைபவரே! நாகலோகம் ஈரேழு பாருக்கு உரியோனே – நாகருலக முதல் பதினான்கு உலகங்களை உடைமையாகக் கொண்ட முதல்வரே! தீது இலாத வேல் வீர – குற்றமில்லாத ஞானமாகிய வேலை ஏந்திய வீரமூர்த்தியே! சேவல் கொடியோனே - சேவலைக் கொடியாக உடையவரே! தேவ தேவ தேவ அதி தேவ பெருமாளே – தேவர்களுக்கும் தேவதேவர்களுக்கும் தனிப்பெருந் தலைவராக விளங்கும் பெருமையிற் சிறந்தவரே! காதி மோதி வாது ஆடு நூல் கற்றிடுவோரும் - கோபித்து ஒருவரை ஒருவர் தாக்கி வாதிடுகின்ற நூல்களைக் கற்று அடங்காதவர்களும், காசுதேடி–பொருள்களை

ஈட்டி, ஈயாமல் வாழ பெறுவோரும் – வறியவர்கட்கு வழங்காமல் தாமே வாழ்ந்து மகிழ்கின்றவர்களும், மாதுபாகர் வாழ்வே எனு நெக்கு உருகாரும் – உமையொருபாகராகிய சிவபெருமானுடைய குமாரரே என்று கூறியும் நினைந்தும் என்பு நெக்குவிட்டு உருகி அன்புசெய்யாத வர்களும், மாறிலாத மாகாலன் ஊர்புக்கு அலைவாரே - மாறுபாடு இல்லாத பெரிய இயமனுடைய நகரஞ் சென்று பற்பல நிரயங்களில் அலைவார்கள்.

பொழிப்புரை

மந்திர ஒலியுருவமானவரே! தனிப்பெருந் தலைவராகிய சிவமூர்த்தியின் திருவுள்ளத்தில் உறைபவரே! நாகருலக முதலிய பதினான்கு உலகங்களையும் உடைமையாகக் கொண்ட முழுமுதலே! குற்ற மில்லாத ஞானமாகிய வேலாயுதத்தை ஏந்தியவரே! இந்திராதி தேவர்கட்கும், பிரமாதி தேவர் தலைவர் கட்கும் தனிப்பெருந் தலைவராக விளங்கும் பெருமிதம் உடைய வரே! ஒருவரை யொருவர் எதிர்த்து சினந்து தாக்கி வாதாடு வதற்குரிய கலைகளைக் கற்று செருக்குற்றவர்களும், பொருள் களை ஈட்டி வறியவர்கட்கு வழங்காமல் தாமே வாழ்ந்து மயங்கு கின்றவர்களும், உமாதேவியை ஒரு பாகத்திற் கொண்ட சிவ பெருமானுடைய திருக்குமாரரே என்று துதித்தும் தியானித் தும் என்பு நெக்குவிட்டு உருக அன்பு செய்யாதவர்களும், மாறுதல் இல்லாத இயமனுடைய ஊர் சென்று பல நரகங் களில் வீழ்ந்து அலைந்து அல்லல்படுவார்கள்.

விரிவுரை

காதி மோதி வாதாடு நூல் கற்றிடுவோரும்:—

அறிவு நூல்களை ஓதியுணர்ந்து, அடங்கி, அறநெறி நின்று, இறையன்பு செய்து நிறைவுறல் வேண்டும். கல்வியின் பயன் கடவுளை வழிபடுதல்.

"கடவுளை ஏன் வழிபடவேண்டும்? கடவுள் இருந்தால் அவர் ஒருபுறம் இருக்கட்டுமே? அவரை வழிபடுவானேன்? கடவுள் உணர்ச்சி எதற்காக?" என்று கடாவுவோர் பலர்.

இவ்வினாக்களை மனதில் வைத்து நிதானமாக நினைத்துக் கூறுவோம். உணர்க.

இறை என்ற சொல் இறு என்ற பகுதியடியாக வந்தது. இறைவன் என்பதற்கு எங்கும் தங்கியிருப்பவன் என்பது பொருள். எங்கும்—எல்லா வுயிர்களிடத்திலும் நீக்கமற நிறைந்து நிற்பவன் இறைவன். எவ்வுயிரும் பராபரன் சந்நிதி யதாகும். எல்லாவுயிர்களும் இறைவனுடைய திருக்கோயில் கள் என்ற எண்ணம் உண்மையாக உள்ளத்தில் ஊன்றி

நிற்குமாயின் எல்லா வுயிர்களையும் இறைவனாகவே எண்ணி அவ்வுயிர்கட்கு இன்பஞ் செய்யும் இனிய பண்பு ஒருவனுக்கு உண்டாகும். ஒரு உயிரைக் கொல்லவோ? இடர்ப்படுத்தவோ மனம் வராது. எல்லாவுயிர்களையும் இறைவன் சந்நிதியாக எண்ணுவோர் அவ்வுயிர்களிடம் தூய அன்பு செய்து உய்வு பெறுவர். பிறஉயிர்கட்கு நன்மை செய்வதைக் காட்டிலும் சிறந்த தவம் இல்லை.

உற்ற நோய் நோன்றல் உயிர்க்குறுகண் செய்யாமை
அற்றே தவத்திற்(கு) உரு.

என்பார் திருவள்ளுவர்.

கடவுள் உணர்ச்சி ஒன்றுதான் இந்த பண்பாட்டைத்தரும். கடவுள் உணர்ச்சி யில்லாதவர் எதனையும் செய்யத் தலைப்படு வர். புண்ணிய பாவங்களையும் உண்டு என்று உடன்படாது, நினைத்தவற்றை எல்லாம் பேசி, நினைத்தவற்றை யெல்லாம் செய்து நிரயமுறுவர்.

ஆகவே கடவுள் அன்பு மனிதவாழ்க்கைக்கு இன்றியமையா தது என்பதனைக் கடைப்பிடிக்க. மனிதவாழ்க்கைக்கு மூச்சுக் காற்று எத்துணை அவசியமோ அத்துணை அவசியம் கடவுளன்பு எனத் தெளிக.

கடவுள் நம் உள்ளத்தில் உறைகின்றார் என்று மறவாது நினைப்பவர் மனத்தினாலும் தீமை செய்யமாட்டார். கடவுள் எல்லாவற்றையுங் கேட்டுக்கொண்டிருக்கின்றார் என்று எண்ணுவோமானால் உண்மைக்கு மாறாக உரைக்க முடியுமோ? ஆகவே இறைவனை ஒரு கணமேனும் மறவாது உன்னி உய்வு பெறவேண்டும். கடவுள் உணர்ச்சி மனிதனைத் தூய்மையாக்கு கின்றது. வாய்மை நெறியில் வளப்படுத்துகின்றது. ஆகவே அறிவுநூல்களைக் கற்கவேண்டும். அவ்வறிவு நூல்களைக் கற்றாரே கற்றாராவார். அல்லாதார் கற்றாரெனினும் கல்லாரே யாவார். "கற்றவர் விழுங்குங் கற்பகக் கனியே" என்றும், "கற்றிடுமடியவர் புத்தியில் உறைபவ" என்றும் வரும் அமுத வசனங்களால் அறிக.

கற்றதன்பயன் வாலறிவன் நற்றாள் தொழுதலே என்று வள்ளுவனார் வகுத்துரைத்த வாய்மையாலும் அறிக.

கற்றதனால் ஆயபயன் என்கொல் வாலறிவன்
நற்றாள் தொழாஅ ரெனின்.

"கற்பவை கற்க" என்று வள்ளுவர் கூறியபடியால் கற்கத் தக்க நூல்களையே கற்கவேண்டும். கற்கத்தக்க நூல்கள் எவை? அவை ஞானநூல்களாகும்.

"அறிவுநூல் கலாமூடர்"

என்கின்றார் அருணகிரிநாதர்.

தமிழ் நூல்களில் இரண்டு பிரிவுகள் உள. ஒன்று தோத்திர நூல்கள்; மற்றொன்று சாத்திர நூல்கள். தோத்திரங்கள் பன்னிரு திருமுறைகள். சாத்திரங்கள் பதினான்கு சித்தாந்த சிவநூல்கள். அருணகிரிநாதர் தாயுமானூர் முதலிய ஆன்றோர்கள் அருளிய நூல்கள் அவைகளின் வழிவந்தவைகள். எனவே இத்தகைய முத்திநெறிக்குரிய சத்திய நூல்களையே கற்றல்வேண்டும். கற்று கற்றவண்ணம் நிற்றல் வேண்டும்.

இங்ஙனமின்றி வெறும் இலக்கண இலக்கியங்களாகிய கருவி நூல்களைமட்டுங் கற்று, அதனால்வந்த பொது அறிவினால் "நம்மினும் உயர்ந்தார் எவர்?" என்று தருக்குற்று, பல புலவர் நிமிர்ந்து நிற்பர். அவர்கள் உள்ளத்தில் குழைவு இராது. சிந்தையில் தணிவும், செய்கையில் பணிவும் இரா. இத்தகையோர் ஒருவரையொருவர் காணும்போது தாம்தாம் கற்ற வித்தைகளைக் கொட்டிக் கலகமிடுவர்.

முன்கூறியபடி அறிவு நூல்களைக் கற்றவர் ஒருவரை ஒருவர் சந்திக்கும்போது பாலுந் தேனுங் கலந்ததுபோல் மகிழ்ந்து அளவளாவுவர்.

"நற்றாமரைக்கயத்து நல்லன்னஞ் சேர்ந்தாற்போல்
கற்றாரைக் கற்றாரே காமுறுவர்"

பிறவித் துன்பத்தை நினைந்து உள்ளம் குழைந்து உருகி "ஈசனே! எண்ணில்லாத பிறவி எடுத்து எடுத்து இளைத்து விட்டேனே! இனி இப்பிறவி தப்பினால் எப்பிறவி வாய்க்குமோ? யாது வருமோ? இனி எளியேனைப் பிறவா வண்ணம் ஏன்று கொள்" என்று உள்ளத்தால் உரைத்து, வெள்ளம்போல் விழிநீர் பெருக நின்று, நெய்யிலேயிட்ட அப்பத்தில் தண்ணீர்ப் பசையற்றவுடன் அந்த அப்பம் அமைதியுறுவதுபோல் சாந்தியுடன் நிற்பர்.

இத்தகைய பெருந்தன்மையும் நன்மையும் அறியாத பலர், மரப்பெட்டியில் உள்ள நூல்களை மாமிசப் பெட்டியில் ஏற்றி, அகந்தைமேற் கொண்டு, மனிதப் பண்பு ஒரு சிறிதுமின்றி, ஒருவரை யொருவர் எதிர்த்து அதிர்ந்து பேசி பற்கள் உதிர்ந்து, கண்கள் பிதிர்ந்து, பேதுறுவர். இம்மையிலே இகழும் மறுமையிலே நரகமும் அடைவார்.

இவர்களுடைய நிலையைக் கண்டு இரக்கமுற்ற பரம குருநாதராகிய எமது அருணகிரிநாதர், "அந்தோ! தமிழ் நூல்களைக் கற்றும் உணர்வுபெறாத இவர் மதியிருந்தவாறு என்னே?" என்று ஏங்கி இந்த அழகிய உபதேசத்தை உரைத்தருளினர்.

"காதி மோதி வாதாடு நூல்கற்றிடுவோர்
மாறிலாத மாகாலனூர்புக் கலைவார்"

காசுதேடி ஈயாமல் வாழப் பெறுவோரும்:—

பொருள் மனிதவாழ்க்கைக்கு இன்றியமையாதது. பொருளின்றி இனிது வாழ முடியாது. துறந்தார்க்கும் துவ்வாதவர்க்கும் இறந்தார்க்குந் துணையாக நிற்கின்ற இல்லறத்தான் பொருளை ஈட்டவேண்டியது கடமைதான். ஆனால் அறவழியில் ஈட்டியதுதான் பொருள். மறவழியில் ஈட்டிய பொருள் பொருளன்று. அது தீவினையின் குவியல். அப்பொருளைத் துய்ப்பார்க்கும் தூய்மைகெடும். "தீவினை விட்டு ஈட்டல் பொருள்" என்ற ஔவையார் அமுதவாக்கை உன்னுக. 'எப்படியாவது—யார்தலையில் கைவைத்தாவது—பலரை நசுக்கியாவது பொருள் வந்தால் போதும்; வாழ்வின் குறிக்கோள் பொருளை யீட்டுவதுதான்' என்று இருக்கக்கூடாது. இது மடமை. தீயவழியில் ஈட்டுவார் இம்மையில் இகழும் மறுமையில் நரகமும் அடைந்து அல்லற்படுவார். ஆகவே உண்மை நெறி நின்று, பிறர் மனம் நோவாமல் அறவழியில் பொருளை யீட்டுக.

அவ்வாறு அறத்தின்வழி ஈட்டிய பொருளை அரனார்தந்தது என்று மறவாமல் கருத்தில் இருத்தல்வேண்டும். அப்பொருளை அடியார்கட்கும் வறியார்கட்கும் இறை திருப்பணிகட்கும் வழங்குதல் வேண்டும். குறைந்தபட்சம் வருவாயில் கால்கூறு வழங்குதல் கடமை. அங்ஙனம் அறஞ் செய்தோர் ஆன்ற புகழும், அழிவற்ற புண்ணியமும் அடைவர்; அவருக்குக் கடமையைச் செய்தோம் என்ற சாந்தியும் உண்டாகும்.

அல்வழியில் பொருளையீட்டி நல்வழியில் செலவிடாத உலோபிகள், பொருள்காத்த பூதம்போல் காத்து, பொருள் என்றவுடன் "ஆ" என்று வாயைப் பிளந்து, உண்ணாதும் உடாதும் கொடாதும் பயனற்றுகிடப்பர். கன்னெஞ்சராகிய வன்னெஞ்சராம் அவர்களைப் பூமி தாங்குதற்குக் கூசும். அவர்களை ஏன் படைத்தாய்? என்று கூறி இறைவனை நோக்கி வினவுகின்றனர் பட்டினத்தார்.

> நாயாய்ப் பிறக்கினும் நல்வேட்டையாடி நயம்புரியும்
> தாயார் வயிற்றில் நரராய்ப் பிறந்துபின் சம்பன்னராய்
> காயா மரமும் வறளாங் குளமும் கல்லாவு மென்ன
> ஈயா மனிதரை ஏன்படைத்தாய் கச்சி ஏகம்பனே.

அறஞ் செய்யாது அல்வழியில் ஈட்டிய பொருள் திருட்டுக்கும் புரட்டுக்கும் சூதுக்கும் வாதுக்குமாகச் சென்று அதனால் உள்ளம் வருந்திய அவர்கள் கடுந்துயரமுற்று மாய்ந்து ஒழிவார். இறுதியில் நரகமும் அடைவார்.

> வேடிச்சி கொங்கை விரும்புங் குமரனை மெய்யன்பினால்
> பாடிக் கசிந்துள்ள போதே கொடாதவர் பாதகத்தால்
> தேடிப் புதைத்துத் திருட்டிற் கொடுத்துத் திகைத்திளைத்து
> வாடிக் கிலேசித்து வாழ்நாளை வீணுக்கு மாய்ப்பவரே.

"கைத்துண்டாம்போதே கரவாது அறஞ் செய்மின்"
"கரவாது இடுவாய் வடிவேலிறைதாள் நினைவாய்"

மாதுபாகர் வாழ்வே எனு நேக் குருகார்:—

நமது மனம் கல்லினும் வலியதாக அமைந்திருக்கின்றது. அப்படியிருத்தல் கூடாது. கல்லின்மீது தாமரை மலராது. அது ஈரமும் சேறுமுள்ள இடத்தில் மலரும். மனம் உருகி இளகிய போது அங்கு இறைவனுடைய திருவடியாகிய தாமரை மலரும்.

"நினியான மனேசிலைமீ துனதாள்
அணியார் அரவிந்தம் அரும்புமதோ" —கந்தரநுபூதி

இறைவனுடைய பெருமையையும் அவனுடைய கருணையின் எளிமையையும், ஆன்மாவாகிய தனது சிறுமையையும், தான் அவனை மறந்த போதும், தாயினும் சாலப்பரிவுடைய அத்தயா பரன் மறவாது தனக்கு அருள்புரியும் தன்மையையும், அப்பரம கருணைக் கடவுளைப் போற்ருது சாலநாள்கழித்த புன்மையையும், போற்றுவதனல் வரும் நன்மையையும் உன்னி உன்னி உருகுதல் வேண்டும்.

அங்ஙனம் உருகாதார் இறைவன் அளவற்ற கருணையினல் நமக்குச் செய்த- செய்கின்ற கருணைத் திறத்தை நினைக்கவுமாட்டாமையால், நன்றியறிவில்லாதவர் ஆவார். நன்றிமறத்தல் உய்வு இல்லாத கொடிய தீவினை என்பதை நமது அறநூல்கள் அறுதியிட்டு உறுதிகூறுகின்றன.

பேசுவதற்குத் தகுந்த இந்த வாயும், கண்களும், கரசரணங்களும், பிற புறஉறுப்புக்களும், அகக்கருவிகளும் அமைந்த இந்த அருமையான உடம்பையும், தண்ணீரும், நெருப்பும் காற்றும் கனலும் வெளியும் அமைந்த இந்த உலகத்தையும், இனிய கனிகளையும் கிழங்குகளையும் தன தானியங்களையும் நமக்குத் தந்தவர் யாவர்? கருணைக்கடலாகிய இறைவனே யன்ருே? நம்மால் ஒரு சிறுபுல்லையேனும் உண்டுபண்ண முடியுமா? உற்று உணர்மின்.

"வாழ்த்த வாயும் நினைக்க மடநெஞ்சும்
தாழ்த்த சென்னியும் தந்ததலைவன்"

என்ற தமிழ்மறை அமிர்தம் போல் நமக்கு அறிவுறுத்துகின்றதே. ஆ! ஆ! எம்பிரானுடைய திருவருளின் திறந்தான் என்னே. நாம் கருவுற்ற உடனேயே நாம் அருந்த இரண்டு பால் குடங்களை அமைத்து வைக்கின்ருன். மதி கதிர் என்ற இருபெரிய விளக்குகளை அமைத்துத் தந்துள்ளான். சகல வளங்களுக்கும் ஆதாரமாகிய மலைகளையும் வற்ருத கடலையும் நமக்கு ஆக்கி அளித்தவன் அவனே யன்ருே? கடலைக் கரையின்றி நிற்கவைத்ததும் அவ்விறைவனுடைய அருளாணை

யன்றோ? கருவில் உயிர்கள் இருக்கின்றபோது அவைகட்கு உணவு செல்லுமாறு அமைத்த அருளை எண்ணினால் எந்தக் கருங்கல் மனந்தான் உருகாது? அவ்வாறு உருகவில்லையானால் ஆறறிவுபடைத்த மனிதனென்று எண்ணவுங் கூடுமோ? பிறர் செய்த அற்ப உதவிகளையே நெஞ்சார நினைத்து வாயாரப் பாராட்ட வில்லையானால் மீளா நரகம் வருமாயின்; பலகோடி உதவிகளைப் புரிந்துவரும் பரம்பொருளின் பரம கருணையை நினைத்து உருகாதார் நரகில் வீழ்ந்து வேதனையுறுவர் என்பதில் எட்டுணையேனும் ஐயமின்று.

"மாதுபாகர் வாழ்வே எனை நெக்குருகாரும்
மாறிலாத மாகால னூர்புக் கலைவாரே"

நாதரூப:—

நாதம்—மந்திரத்தை உச்சரிக்கும்போது உண்டாகும் ஒலி. "ஓசை யொலி யெலாம் ஆனாய் நீயே" என்ற அப்பர் திருவாக்கின்படி இறைவன் ஒலியுருவாக விளங்குகின்றான்.

மாநாதர் ஆகத் துறைவோனே:—

நாதன்—தலைவன்; மாநாதன்—தனிப்பெருந்தலைவன்.

சிவபெருமானுடைய திருமேனியில் எல்லா அண்டகோடிகளும், மாலயனாதி வானவர்களும், சராசரங்களும் அடங்கியிருக்கின்றன. முருகவேள் சிவபெருமானுடைய இதயத்தில் ஒளிமயமாக விளங்குகின்றார். அவ்வொளிதான் அமரர் பொருட்டு, நெற்றிக்கண் வழியாக வெளிப்பட்டு, அறுமுகமும் பன்னிருகரங்களும், பதினெட்டு விழிகளுமாக சரவணப் பொய்கையில் கருணைவடிவாகத் தோன்றியருளியது. அவ்வாறு தோன்றியருளினாலும் சிவமூர்த்தியின் திருவுள்ளத்தில் முருகவேள் உறைந்த வண்ணமாக இருப்பர். இதனால் சிவன் வேறு முருகன் வேறு என்று எண்ணுதற்கு இடமின்று.

மண்ணளந்திடு மாயனும் வனசமேலவனும்
எண்ணரும்பகல் தேடியுங் காண்கிலா திருந்த
பண்ணவன் நுதல் விழியிடைப் பரஞ்சுடருருவாய்
உண்ணிறைந்த பேரருளினால் மதலையாயுதித்தான்.

சூரபன்மன் வேறு ஒரு குற்றமுஞ் செய்தானல்லன். முருகனை சிவபிரான் என்று அறியாதும், சிங்கமுகன் முதலியோர் அறிவுறுத்தியும் தெளிவு பெறாதும், எண்ணில் காலந் தவஞ் செய்து பெற்ற பெருவரங்களையும் இழந்து குலத்துடன் அழிந்தான். எனவே சிவன் வேறு குகன் வேறு என்று எண்ணாது சிவமூர்த்தியின் உள்ளக் குகைக்குள் வீற்றிருக்கின்ற ஒளிவடிவு முருகன் எனவுணர்க.

தீதிலாத வேல் வீர:—

வேல் என்பது ஞானம்; ஞானம் நன்மையையே செய்யும்; தீமையைச் செய்யாது. அறிவுள்ளவன் ஒன்றுக்கும் அஞ்ச மாட்டான். "நமனை யஞ்சோம்" என்பது ஞானிகளுடைய வீரவசனம். ஞானத்தையுடையவன் மலைபோன்ற துன்பங்கள் வரினும் காற்றினால் கலங்காமல் நிற்கின்ற கல்மலைபோல் கலங்காமல் நிற்பான். முருகனை வணங்குகின்ற மெய்யடியார்கட்கு ஞானமும் ஞானத்தால் விளையும் வீரமும் உண்டாகும் என்க.

சேவற் கொடியோனே:—

ஒளியைக் கண்டு மகிழ்வது சேவல்; அது உலகிற்கெல்லாம் ஒளியைத் தரும் பெருவிளக்காகிய கதிரவனைக் கண்டு களி கூர்ந்து சிறகடித்து "கோ கோ" என்று கூவும். செவ்வேட் பரமன் எங்கு சென்றாலும் சேவற்கொடியுடன் செல்லுவார். அது நாததத்துவம். நாததத்துவத்தினால் மாயையின் வலி குறையும்.

தேவ தேவ தேவாதிதேவ:—

முருகவேள் மூவர் தேவாதிகட்கும் முழுமுதலாய் விளங்குபவர்.

"படைத்தளித் தழிக்குந் த்ரிமூர்த்திகள் தம்பிரானே"

"இதழவிழ் பொதிந்த தாமரையின்
மணவறை புகுந்த நான்முகனும்
எரிதிரை யலம்பு பாலுததி நஞ்சராமேல்
இருவிழி துயின்ற நாரணனும்
உமை மருவு சந்த்ர சேகரனும்
இமையவர் வணங்கு வாசவனும் நின்றுதாழும்
முதல்வ"

கருத்துரை

எல்லா வுலகங்கட்கும் தலைவரே! வேலை ஏந்திய விமலரே! மூவர் தேவாதிகள் போற்றும் முழுமுதலே! வாதமிடக் கற்பவரும், அறஞ் செய்யாத செல்வரும், அன்பு செய்யாத அவலரும் நரகில் வீழ்ந்து வருந்துவார்கள்.

—

65

உ

திருச்சிற்றம்பலம்

பெரிய புராணம்

சிறுத்தொண்ட நாயனர் புராணம்

(ஙகூ-ம் பக்கத் தொடர்ச்சி)

விளக்கம்

திருச்செங்காட்டங்குடி

விநாயகப் பெருமான், இமையவர்கட்கும் முனிவரர்கட்கும் இடர் பல இழைத்த கஜமுகாசுரனை மாய்த்தருளியபோது, அவன் உடம்பிலிருந்து வெளிப்பட்ட உதிரம் அக்காடு முழுவதும் பரவியதனல் அக்காடு சிவந்த நிறத்தை யடைந்தது. அதனல் அதற்குச் செங்காடு என்றபேர் உண்டாயிற்று; கணபதி ஆங்கு ஆத்திமரத்தின் கீழ் ஒரு சிவலிங்கத்தை எழுந்தருளப் புரிந்து பூசித்தனர். அங்கு பலர் குடியேறினர்கள். அதனல் அப்பதி திருச்செங்காட்டங்குடி எனப் பெருமை பெற்றது. அத் திருக்கோயில் 'கணபதீச்சுரம்' எனப்படும்.

ஆத்திமரம் பழைமையானது; இன்றும் இருக்கின்றது. அதன் கீழ் உத்தராபதீச்சுரர் திருவுருவம் மிகவும் அருமையாக அமைந்துள்ளது.

இத்தலம் நன்னிலத்திற்கு அருகில் உள்ளது. போகும் வழியில் அப்பர் முத்தி பெற்ற திருப்பூம்புகலூர் இருக்கின்றது. அரவந் தீண்டி மடிந்த செட்டி மகனை சம்பந்தர் திருப்பதிகம் பாடி எழுப்பிய திருமருகல் திருச்செங்காட்டங்குடிக்கு மிக அண்மையில் உள்ளது. திருச்செங்காட்டங்குடியில் சிறுத்தொண்டர் இருந்த மனை இப்போது திருக்கோயிலாக அவர் திருவுருவத்துடன் விளங்குகின்றது.

சிறுத்தொண்டர்

இவருடைய இயற்பெயர் பரஞ்சோதியார். இவர் தொண்டினலே சிறியவரல்லர்; இவர் செய்த தொண்டு மிகப் பெரியது. நினைக்கவும் அரிய அத்துணை மேன்மை பெற்றது. இவர் இப்பெயர் பெற்ற காரணத்தைச் சேக்கிழார் பெருமானே கூறியருளியிருக்கின்ருர்.

இவர் மிகப் பெரிய வீரர். படைக்கலங்களில் வல்லவர்; தன்னையுடைய பல்லவமன்னனல் வெல்லுதற்கரிய வடபுலத்து வாதாவி மன்னனை வென்று வாகைமாலை சூடிவந்தவர். இத்தகைய சிறந்த வீரராக விளங்கிய இவர், சிவனடியார் திருமுன்பு எண்சாணுடம்பு ஒரு சாண்போல் குறுகி அடங்கி ஒடுங்கிச் சென்று தொழுவார். அடியார் திருமுன் மிகச்சிறியராகச் சென்று வழிபட்ட காரணத்தினல் இப்பெயர் பெற்ருர்.

சீதமதி யரவினுடன் செஞ்சடைமேல் செறிவித்த
நாதனடி யார்தம்மை நயப்பாட்டு வழிபாட்டால்
மேதகையார் அவர்முன்பு மிகச்சிறிய ராயடைந்தார்
ஆதலினால் சிறுத்தொண்டர் எனநிகழ்ந்தார் அவனியின்மேல்.

“மக்கட் பாசத்தை யறுத்து மலையளவு தொண்டுசெய்த இவர் சிறுத்தொண்டர் என்ற பேரைத் தாங்கினார் என்றால் ஒரு தொண்டுஞ் செய்யாது, தொண்டர்போல் நடிக்கும் நாங்கள் என்ன பேரைத் தாங்குவது?” என்று கூறி வள்ளலார் பாடுகின்றார்.

ஆர்கொண்டார் சேய்க்கறியிட் டாரே சிறுத்தொண்டப்
பேர்கொண்டா ராயிடிலெம் பெம்மானே—ஓர்தொண்டே
நாய்க்குங் கடைப்பட்ட நாங்களென்பேம் எங்கள்முடை
வாய்க்குமிங் கில்லைதோர் வழக்கு.

இவர் இருந்த பதவி

சோழதேயத்தை யரசுபுரிந்த மகேந்திரவர்ம பல்லவனுடைய புதல்வன் நரசிம்மவர்ம பல்லவன் என்ற மன்னனிடம் சேனை வீரராய்ச் சேர்ந்து, நாளடைவில் சேனாதிபதியாக ஆனார்.

யானைமீது ஏறி படைகளுடன் சென்று பலதேயத்து மன்னர்களுடன் போரிட்டு பற்பல தேயங்களை சோழதேயத்துடன் இணைத்து, அம் மன்னர்களைக் கப்பங்கட்டுமாறு புரிந்தார். அதனால் இவர் பெருமை இமயம்போல் மிகவோங்கி நின்றது. அரசனுடைய நன்மதிப்புக்கு உரியராக உலகம் போற்றும் அலகிலாப் புகழுடன் இவர் விளங்கினார்.

ஈசனடியார்க் கென்றும் இயல்பான பணிசெய்தே
ஆசில்புகழ் மன்னவன்பால் அணுக்கராய் அவற்காகப்
பூசல்முனை களிறுகைத்துப் போர்வென்று பொருமரசர்
தேசங்கள் பலகொண்டு தேர்வேந்தன்பாற் சிறந்தார்.

இவ்வாறு பலதேயங்களை வென்றதுடன் அமையாமல், வடநாட்டில் வாதாவி என்ற நகரத்தை யரசுபுரிந்த புலிகேசி என்ற மன்னன் பல்லவனை மதியாதிருந்ததனாலும், முன்பு ஒரு சமயம் பல்லவன் அவன்பால் தோல்வியுற்றதனாலும் இவர் யானைமீது சென்று, அப் புலிகேசியை வென்று, அவன் கோட்டையைத் துகள் செய்து, அங்குள்ள அரிய பெரிய ஒன்பது மணிகளையும், கரி பரி முதலியவைகளையும் கவர்ந்து வந்து மன்னனை மகிழ்வித்தார். இத்துணைப் பெரிய வீரச்செயல் புரிந்தவர் சிறுத்தொண்டர் என உணர்க.

மன்னவற்குத் தண்டுபோய் வடபுலத்து வாதாவித்
தொன்னகரைத் துகளாக்கித் துளைநெடுங்கை வரையுகைத்துப்
பன்மணியு நிதிக்குவையும் பகட்டினமும் பரித்தொகையும்
இன்னனவெண் ணிலகவர்ந்தே யிகலரசன் முன்கொணர்ந்தார்.

வாதாவி என்ற நகரம், பம்பாய் ராஜதானியில் பெல்காம் மாவட்டத்தில் உள்ளது. சாளுக்கிய அரசன் புலிகேசியின் தலைநகரம்,

அங்குள்ள கல்வெட்டில், "பல்லவ மன்னன் நரசிம்மவர்மனுடைய சேனாதிபதி பரஞ்சோதியாரால் வென்று தகர்க்கப் பட்டது" என்று காணப்படுகின்றது. இன்றும் இடிந்த கோட்டை அங்கே காணப்படுகின்றது.

இப் போர் நிகழ்ந்த காலம் கி. பி. 642. எனவே ஏழாம் நூற்றாண்டில் நிகழ்ந்தது சிறுத்தொண்டர் வரலாறு என்றும், அதன் துணையால் அவர்காலத்தினர்களாகிய திருஞானசம்பந்தர் திருநாவுக்கரசர் முதலிய நாயன்மார்களுடைய காலமும் அதேகாலம் எனவும் துணியப்படுகின்றது.

இவர் கல்வித் திறம்

கல்வியென்பது தானும் பிறரும் உய்யும்பொருட்டு கற்கப் படுவது. இவர் தான் உய்ய வேதாகமங்களையும், பிறரை உய்விக்க ஆயுள் வேதக்கலையும் (மருத்துவக்கலை), தேசத்தின் பணிக்காக போர்க்கலைகளையும் கற்று அவற்றில் வல்லாராய் விளங்கினார். வல்லாராய் விளங்கியதுடன் அமையாமல் நல்லாராகவும் விளங்கினார்.

ஆயுள்வேதக் கலையும் அலகில்வட நூற்கலையும்
தூயபடைக் கலத்தொழிலுந் துறைநிரம்பப் பயின்றுள்ளார்
பாயுமத குஞ்சரமும் பரியுமுகைக் கும்பண்பு
மேயதொழில் விஞ்சையினும் மேதினியின் மேலானார்.

இத்தனையும் கற்றதோடு நில்லாமல் உயிர்க்கு உறுதி பயக்கும் அறிவுநூல்களையும் இடையறாது பயின்றார்.

கல்வியின் பயன் கடவுளை வணங்குவதேயாம் என்பதை இவர் நன்கு உணர்ந்து சிவபெருமானுடைய திருவடியில் பள்ளத்தை நாடிச் செல்லும் வெள்ளம் போல் அன்பு செய்யும் பண்புடையராய் விளங்கினார்,

உள்ளநிறை கலைத்துறைகள் ஒழிவின்றிப் பயின்றவற்றால்
தெள்ளிவடித் தறிந்தபொருள் சிவன்கழலிற் செறிவென்றே
கொள்ளுமுணர் வினின்முன்னே கூற்றுதைத்த கழற்கன்பு
பள்ளமடையாய் என்றும் பயின்றுவரும் பண்புடையார்.

அன்னதானச் சிறப்பு

மன்னன் தந்த நிதிகளையும் இவர்பால் இருந்த நிதிகளையுங் கொண்டு, சிவனடியார்கட்கு அன்னம் படைத்து அவர்கள் உண்டபின் தான் உண்ணும் தொண்டினை நாடோறும் நியதியாக இவர் கொண்டிருந்தார்,

> நறைஇதழித் திருமுடியர் அடியாரை நாடோறும்
> முறைமையினில் திருவமுது முன்னூட்டிப் பின்னுண்ணும்
> நிறையுடைய பெருவிருப்பால் நியதியாகக் கொள்ளும்
> துறைவழுவா வகையொழுகுந் தூயதொழில் தலைநின்றார்.

என்ற திருவாக்கினால் இவருடைய நியதி விளங்குகின்றது.

என்ன தானங்களிலும் சிறந்தது அன்னதானம்.

கிருதயுகத்திலே உயிர் எலும்பைப்பற்றி நின்றது.
திரேதாயுகத்திலே உயிர் நரம்பைப்பற்றி நின்றது.
துவாபரயுகத்திலே உயிர் உதிரத்தைப்பற்றி நின்றது.
கலியுகத்திலே உயிர் அன்னத்தைப்பற்றி நின்றது.

"உண்டிகொடுத்தோர் உயிர் கொடுத்தோரே"

என்பது புறநானூறு.

ஆகவே அடியார்கட்கும் வறியார்கட்கும் அன்னம் வழங்கும் திருத்தொண்டினை இவர் நியதியாகக் கொண்டார்.

அதுவும் குழம்பு ரசம் சோறு இவைகளை ஒரு அண்டாவில் கொட்டி விரவி கதம்பமாக, சிலரை அடித்தும், சிலரை விரட்டியும், சிலரை வைதும் போடுகின்ற அன்னதானமா அது? அற்றன்று. இவர் செய்த அன்னதானத்தின் சிறப்பை அடியிற் கண்ட கவியினால் உணர்க.

> தூயதிரு அமுதுகனி கன்னலறு சுவைக்கறிநெய்
> பாயதயிர் பால்இனிய பண்ணியம் உண்ணீரமுதம்
> மேயபடியாலமுது செய்விக்க இசைந்தடியார்
> மாயிருஞாலம்போற்ற வரும் இவர்பால் மனமகிழ்ந்தார்.

ஒருநாள் இருநாள் அன்னதானம் புரிவதிலேயே எத்துணையோ இன்னல்கள் ஏற்படுகின்றன. அயர்ந்துவிடுகின்றது உடம்பு; இவர் நாடோறும் செய்தார் எனில் இவருடைய ஊக்கமும் அன்பும் அளவிடற்கரியன.

ஆயிரம் அக்ரகாரம் அந்தணர்க்கு ஈந்த பயனும், ஆயிரம் கோபுரங்களுடன் கூடிய திருக்கோயில்களைக் கட்டிய புண்ணியமும் ஒரு சிவஞானிக்கு அமுதுபடைத்த புண்ணியத்திற்கு நிகராகா என்பார் திருமூலர்.

> அகரமாயிரம் அந்தணர்க் கீயிலென்
> சிகரமாயிரம் செய்து முடிக்கிலென்
> பகருஞானி பகலுண் பலத்திற்கு
> நிகரில்லை யென்பது நிச்சயந்தானே.

இத்தகைய சிவஞானிகள் ஆயிரக்கணக்கானவர்கள் நாடோறும் சிறுத்தொண்டருடைய திருமனையில் அமுது செய்தார்கள் என்றால், அப்புண்ணியச் செயலின் சிறப்பை அளந்துரைக்க

வல்லார்யாவர்? ஒரு உண்மையான சிவனடியாரை உண்பிப்பது, மூவுலகத்துள்ள உயிர்களையும் உண்பிப்பதோடொக்கும் என அறிக.

பயன் கருதாது, புகழை விரும்பாது கடமையுணர்ச்சிடன் கணபதிச்சுரப் பெருமானைக் கருத்திலிருத்தி உள்ளத்தில் நிறைந்த ஒப்பற்ற அன்பினால் எண்ணில்லாத அடியார்கட்கு அன்னம் படைத்து வழுவின்றி ஒழுகினார் என்பதை யாமெல்லாம் உணர்ந்துய்ய எங்கள் பெருந்தகையார் சேக்கிழார் அறிவிக்கின்றார்.

கண்ணுதலார் கணபதீச் சுரத்தின்கண் கருத்தமர
உண்ணிறை யன்பினில்பணிசெய் தொழுகுவார் வழுவின்றி
எண்ணில்பெருஞ் சீரடியார் இடைவிடா தமுதுசெய
நண்ணியபே ருவகையுடன் நயந்துறையு நாளின்கண்.

சிவஞானப் பாலுண்ட சிவகுமாரராகிய திருஞானசம்பந்த பரமகுருநாதர் தமது திருத்தொண்டர் குழாத்துடன் வந்து சிறுத்தொண்டர் திருமனையில் சில நாள் தங்கி அமுது செய்தாரெனில் இவருடை சிவபுண்ணியத்திற்கு எல்லையுளதோ பரமனையே பாடும் பாலறாவாயர் தாம் பாடிய செந்தமிழ்ப் பதிகத்தில் இவரையும் இவர் திருப்புதல்வர் சீராளதேவரையும் சிறப்பித்துப் பாடியிருக்கின்றார்.

"பொடிநுகருஞ் சிறுத்தொண்டர்க் கருள்செய்யும் பொருட்டாகக்
கடிநகராய் வீற்றிருந்தான் கணபதீச் சரத்தானே"

"சீராளன் சிறுத்தொண்டன் செங்காட்டங் குடிமேய
பேராளன்"

திருஞானசம்பந்தருடைய திருவருளைப்பெற்று அவருடைய திருத்தொண்டரில் முதல்வராய் நின்றாராதலின் இவரை வணங்கினால் திருஞானசம்பந்தருடைய கருணையை எளிதில் பெறலாம் என்பதனை நம்பியாண்டார் நம்பிகள் கூறுமாற்றால் அறிக.

விரும்பும் புதல்வனை மெய்யரிந் தாக்கிய இன்னமிர்தம்
அரும்பும் புனற் சடையாயுண் டருள் என்றடிபணிந்த
இரும்பின் சுடர்க் களிற்றான் சிறுத்தொண்டனை ஏத்துதிரேல்
சுரும்பின் மலர்த் தமிழாகரன் பாதத் தொடர் வெளிதே.

(தொடரும்)

உ

முருகா

கற்பு

மதயந்தி

அந்தக் குடும்பம் வறுமையால் வாடி, பசியினால் களைத்து, உடம்பு இளைத்து வருந்திக்கொண்டிருந்தது. ஒரு அணு கிடைப்பது முயற்கொம்பாக இருந்தது. மூன்று நான்கு நாட்களுக்கு ஒருமுறைதான் அவர்கள் வீட்டில் அடுப்பு புகைந்தது. அப்படி அடுப்பில் தீமூட்டினால் அரசர் வீட்டில் புரியும் அசுவமேதயாகம் போல் தோன்றும். குழந்தைகுட்டிகள் பாவம்! தேரைபோல் மெலிந்து நலிந்து அழுதுகொண்டிருக்கும். ஆ! ஆ! என்ன கொடுமை? பசியின் கொடுமைதான் என்னே? எங்காவது திருமணம் முதலிய சிறப்பு நிகழ்ச்சிகளுக்குச் சென்றாலும் ஏழைகளுக்கு அங்கே ஆதரவு ஏது? கண்கள் குழிந்து, உடம்பில் நரம்புகள் முழுவதும் வெளியில் தோன்றி உலர்ந்த நாவும் ஒட்டிய வயிறுமாக அக் குடும்பத்தார் பார்க்க பரிதாபமாகக் காட்சியளித்தனர். அவர்களைக் கண்டு இரங்குவார் அந்த ஊரில் ஒருவரும் இலர். நிறைந்த செல்வமுடையார் சிலர் அந்த ஊரில் இருந்தும் இந்த ஏழைகட்குப் பயன் இல்லை.

மதயந்தியின் கணவன் மல்லப்பன் எவ்வளவோ பாடுபட்டு ஓடி ஓடி செய்தும் போதுமான அளவு கூலி இல்லாமையால் வறுமைப்பிணி அவர்களை வாட்டியது. மக்கள் கைத்தறியில் செய்த துணிகளை உடுக்காமல், எல்லாம் ஆலையில் செய்த மெல்லிய ஆடைகளையே உடுத்து நவநாகரீகத்தில் மயங்கிவிட்டபடியால் மல்லப்பனைப் போன்ற ஏழை நெசவாளிகளின் கதி அதோகதியாகிவிட்டது.

மல்லப்பன் நன்மனம் படைத்தவன். நிரம்பவும் பயந்த இயல்புடையவன். யாராவது சிறிது சத்தம் போட்டுப் பேசினாலும் பேசாமல் வீட்டிற்குள் வந்துவிடுவான். தன் வேலையில் கண்ணும் கருத்துமாக இருப்பான். கெட்டியாகப் பேச மாட்டான்.

அவன் உடுத்திருந்த சோமனுக்குப் பல தையல்கள்; சோமனுக்கு இருபத்தேழு தையல்கள் இருப்பது இயல்புதானே. பசியின் கொடுமையால் சிறிது நேரம் வேலை செய்தவுடன் உடம்பில் அசதிவந்துவிடும். என் செய்வான்? தெய்வமே என்று பெருமூச்சு விடுவான். சில நிமிஷம் இளைப்பாறி மீண்டும் சிறிது செய்வான். ஒருநாள்கூட வயிறார உண்டறியான். இந்த வறுமையில் ஆண் குழந்தைகள் ஆறும் பெண்குழந்தைகள் ஐந்தும் பிறந்திருந்தன.

அவர்கள் வாழ்வில் அணுவளவுகூட மகிழ்ச்சியில்லை. குழந்தைகளைப் படிக்கவைக்க முடியாமல் தவித்தான். குடிக்கக்

கூழ்இல்லையானால் படிக்கவைக்கப் பணம் ஏது? தீயில் கிடந்து நெளியும் நீள் புழுக்களாக நெடிய வேதனையுற்றார்கள். அவர்கள் படுங் கடுந்துன்பத்தைக் கண்டால் கல்லுங் கரையும்.

மதயந்தி தன் கணவனைநோக்கி, "என் அன்புடைய ஆர் வலரே! நமது நிலையை நோக்கினால் என் மனம் உருகுகின்றது. முந்தி ஒரு சீலை நெய்ய 8, 9, ரூபாய் கூலி வந்தபோது தாங்கள் மண்மிசை நடக்காமல் விண்மிசை நடந்தீர். இரண்டணா காபி குடிப்பதற்காக எட்டணா வண்டி வைத்துக்கொண்டு போனீர். பணம் நிறைய வந்தபோது பாதிராத்திரியில் குடைபிடித்தீர். சிறிது சிக்கனமாக இல்லாமற்போனீர். நிதம் பவுர்ணமி வரும் என்று எண்ணினீர். காலசக்கரம் வேகமாகச் சுழன்று கொண்டிருக்கின்றது என்பதை யறிந்தீரில்லை. எறும்புகூட கிடைக்கின்றபோது நொய்யரிசியைக் கொண்டுபோய் வளையில் சேமித்து வைக்கின்றது. இல்லறத்தில் வாழும் நாம் வருவாய் கிடைக்கும்போது சற்று நிதானமாக இருந்திருக்கவேண்டும். தங்களுக்குத் தெரியாததை நான் சொல்வதாக எண்ணக் கூடாது. சுடர் விளக்கேயானாலும் தூண்டுகோல் வேண்டு மென்பார்கள். அதனால் நினைவு செய்கின்றேன். குற்றமாயின் மன்னிக்கவேண்டும். எப்போதும் ஒரு தன்மையாக இராது. உலகமே மாறுபாடுடையது. வெய்யில் மழை; ஒளி இருள்; வெப்பம் தட்பம்; நன்மை தீமை; இன்பம் துன்பம்; விருப்பு வெறுப்பு; வரவு போக்கு; இரவு பகல்; காடு நாடு; பள்ளம் மேடு; அறிவு அறியாமை; வாழ்வு தாழ்வு. இப்படி எல்லாமே இரட்டைகளாக அமைந்திருக்கின்றன. ஆகவே மனிதர்களுக்கு வரவு என்றும் ஒருமாதிரியாக இராது. வருகின்றபோது மீதம் பண்ணிவைக்கவேணும். வந்தபோது தலைகால் தெரியாமல் செலவழித்ததனால் வராதபோது வாதனைப் படவேண்டிய தாயிற்று" என்றாள்.

மல்லப்பன், "பெண்ணே! நீ கூறுவது முற்றிலும் உண்மை தான். நான்மட்டுமல்ல; நமது நெசவாளிகள் ஒருவர் இருவர் தவிர பூராவுமே இப்படித்தான் வரும்போது படாடோபமாகவும் வராதபோது பஞ்சையாகவும் வாழ்கின்றார்கள். போனதுபற்றி சிந்திக்கக்கூடாது. இனி நடப்பதைப்பற்றி ஆலோசிப்போம். ஜனங்களுக்கு வரவர ஆடம்பரத்திலேயே அதிக மோகம். இனி நாம் குடும்பத்தை எப்படி நடாத்துவோம்; எனக்கு ஒன்றுமே தெரியவில்லை. உன்னுடைய அன்பு ஒன்று எனது பாலைவன வாழ்க்கையில் சிறிது நிழல் தருகின்றது. உன்னை மனைவியாகத் தந்த என் பழைய புண்ணியத்தைப் பாராட்டுகின்றேன். குண வதியான உனது அன்புப்பார்வை எனக்கு வசந்தகாலத்துச் சந்திரனைப்போலக் குளிர்ச்சியைத் தருகின்றது. உன் அமுத மொழி எனக்கு ஆறுதலையளிக்கின்றது" என்று கூறும்போது மல்லப்பன் கண்களில் முத்துமுத்தாக நீர்த்துளிகள் சிந்தின.

மதயந்தியின் இதயம் வெடித்துவிடுவதுபோல் இருந்தது. எதிர்வீட்டில் தயாள சிந்தையுள்ள ஒரு பெண்மணி சிறிது தனமும் மனமும் உடையவள். அவளை மதயந்தி சந்தித்து தனது குடும்பத்தின் குறைகளைச் சொல்லியழுதாள். அவள் மனம் உருகி, நூற்றைம்பது ரூபாய் கொடுத்து, "இந்த பணத்தை முதலாக வைத்துக்கொண்டு நூல் வாங்கித் தொழிலை நடத்துங்கள். கடவுள் உனக்குக் கருணைபுரியட்டும்" என்று கூறி வாழ்த்தினள். அதைக் கொணர்ந்து மதயந்தி கணவனிடம் தந்தாள். அந்த வேளைக்கு அவர்கட்கு அது புதையல் எடுத்த பொற்குடம்போல் ஆறுதலையளித்தது. அதில் சிறிது பணங் கொண்டுபோய் அரிசி பருப்பு முதலியவை வாங்கிவந்து சமைத்து அன்று இரவு வயிரார உண்டார்கள். அன்று அவர்கள் வீட்டில் சங்கராந்திபோல் இருந்தது. பிள்ளைகளுக்கெல்லாம் பெருமகிழ்ச்சி.

மல்லப்பன் அந்த ரூபாய்க்கு நூல் வாங்கி வந்து சொந்தமாக நெசவு செய்து தக்க விலைக்கு அதன்மூலம் வரும் வருவாயைக் கொண்டு ஒரு அளவில் குடும்பத்தை நடாத்திக் கொண்டு வந்தார்கள். சிறிது அது அமைதியைத் தந்தது.

மல்லப்பனுக்கு வரவர பக்தி குறைந்தது. அந்தவூரில் சில புல்லர்களின் கூட்டுறவால் கோயிலுக்கும் போவதில்லை. நெற்றியில் திருநீறு இட்டுக்கொள்வதில்லை. சுத்த சூனியமாக இருந்தான். அவன் போக்கு வர வர என்னமோபோல் மாறிக் கொண்டே வந்தது.

கணவனுடைய போக்கைக் கண்டு மதயந்தி பெருங் கவலை கொண்டாள். அவளுக்கு வறுமையின் துன்பத்தைவிட அது மிகப் பெருங் கவலையைத் தந்தது. என்பு பற்றி எரிந்தது. இதயங் கரிந்தது.

கணவனை நோக்கி கலங்கிய கண்களையுடையவளாய் கழறுவாள். "அன்புடைய ஆர்வலரீர்! தங்கள் போக்கு நன்றாக இல்லை. தங்களுடைய சூழ்நிலையும் நன்றாகஇல்லை. நல்லார் உறவு நலந்தரும். தீயார் நட்பு தீமைதரும்; கடவுள் பக்தி மனித வாழ்க்கைக்கு இன்றியமையாதது. விலங்கினின்றும் மனிதனைப் பிரிப்பது இறையன்பு ஒன்றுதான். தங்கள் மனம் ஏன் இப்படி இருண்டுவிட்டது. எனக்கு பெரிய ஆச்சரியத்தைத் தருகின்றது. தங்கள் போக்கை எண்ணி என் மனம் வருந்துகின்றது. உங்களை நான் வேண்டுவது நகையன்று; பட்டாடையன்று; வேறு பல பொருளன்று; நீங்கள் முகத்தை இப்படிப் பாலை வனம்போல் வைத்திருப்பது நல்லதன்று; "நீறில்லா நெற்றிப்பாழ்; நெய்யில்லா உண்டிப்பாழ்; ஆறில்லா ஊருக் கழகுபாழ்" என்று ஔவையார் கூறுகின்றார். "வெண்ணீறு அணிகிலாதவரைக் கண்டால் அம்ம நாம் அஞ்சு

மாறே" என்று மாணிக்கவாசகர் கூறுகின்றார். தாங்கள் பரம ஞானிகளுடைய அறிவு நிறைந்த உபதேசங்களை நம்புங்கள். நமது சமயாசாரப்படி திருநீறு பூசிக்கொள்ளுங்கள்"

"ஏண்டி! திருநீறு பூசிக்கொள்வதனால் என்னபயன்? குளித்தவுடன் நெற்றிக்கு வெள்ளை யடிப்பதுபோல் அதனை ஏன் பூசிக்கொள்ளவேண்டும்?"

"குடியிருக்கின்ற வீட்டிற்கு வெள்ளையடிப்பார்கள். நமது நெற்றியில் அறிவு குடியிருக்கின்றது என்பதற்கு அடையாளமாக ஏன் பூசிக்கொள்ளக்கூடாது"

"போடி பயித்தியமே! அதெல்லாம் பழங்காலம். இக்காலத்திற்கு அது ஒவ்வாது. பழையன கழித்துப் புதியன புகுத்துவதே அறிவுடைமை"

"அப்படியானால் வாயால் உண்பதும் பழைய வழக்கந்தானே? உலகந் தோன்றிய நாள்தொட்டு வாய் வழியாகவே உண்கின்றார்கள். அதை அறவே ஒழித்து வேறுவழியாக உண்ணலாமல்லவா?"

"ஏதடி நீ விதண்டவாதம் பேசுகின்றாய். உன் கருத்தின்படி திருநீறு பூசிக்கொண்டால் அதனால் உண்டாகும் நன்மை யாது?"

பசுவின் சாணத்திற்கு நச்சுக்கிருமிகளைக் கொல்லும் ஆற்றல் உண்டு; ஈயம் பூசிய ஏனத்தில் பசுவின் சாணத்தைக் கரைத்து ஒருநாள் ஊறவைக்கின்றார்கள். நவாசாரத்தின் நச்சுத்தன்மை நீங்கும்பொருட்டு, நேர்வாளத்தையும் பசுவின் சாணத்தில் மூன்று நாள் ஊறவைக்கின்றார்கள் மருத்துவர்கள். மேலும் ஒருபொருளை முறைப்படி நீற்றினால் முன்னிலும் அதிக ஆற்றல் உண்டாகின்றது. தாம்பிரத்தைக் காட்டிலும் தாம்பிரபஸ்மத்திற்கு அதிக ஆற்றல் உண்டு. அதுபோல் பசுவின் சாணத்தினும், அதை நீற்ற திருநீற்றுக்கு நச்சுக்கிருமிகளைக் கொல்லும் ஆற்றல் அதிகம். அவரைக்கொடியில் சிறு கிருமிகள் மலியும்போது சாம்பலைத் தெளித்து அக்கிருமிகளை அகற்றுவது கண்கூடு. அது சாமானியமான சாம்பல். திருநீறு முறைப்படி மந்திர பூர்வமாகச் செய்தது. ஆகவே அது நோய்களைத் தடுக்கவல்லது; காண்பதற்கு கவினைத்தருவது; பேய்முதலிய பீடைகளை யகற்றுவது; முத்தியையும் சித்தியையும் தரவல்லது; இன்னும் எத்தனையோ நலன்களை நல்குவது திருநீறு.

முத்தி தருவது நீறு முனிவ ரணிவது நீறு
சத்திய மாவது நீறு தக்கோர் புகழ்வது நீறு
பத்தி தருவது நீறு பரவ இனியது நீறு
சித்தி தருவது நீறு திருஆலவாயான் திருநீறே.

காண இனியது நீறு கவினைத் தருவது நீறு
பேணி யணிபவர்க் கெல்லாம் பெருமை கொடுப்பது நீறு
மாணந் தருவது நீறு மதியைத் தருவது நீறு
சேணந் தருவது நீறு திரு ஆலவாயான் திருநீறே.

என்று சிவஞானப் பாலையுண்ட திருஞான சம்பந்தப் பெருமானார் கூறுகின்றார். ஞானசம்பந்தரைவிடவா நமது அறிவு உயர்ந்தது? ஆகவே திருநீற்றிலும் திருக்கோயில் வழிபாட்டிலும் ஒருவனுக்கு வெறுப்பு வருமானால் அது நல்லகாலத்திற்கு அடையாளமாகாது. தாங்கள் வீண்பிடிவாதம் பண்ணாதீர். திருநீற்றையணிந்து கொள்ளும்''

"பெண்ணே! உன்வார்த்தையில் உண்மையிருக்கின்றது. இப்போது என் மனதில் திருநீற்றின் பெருமை விளங்குகின்றது; அழகை விரும்புவோர் வெள்ளைப் பொடியைத்தான் பூசுகின்றார்கள். எனக்குத் தெளிவு பிறந்து விட்டது. ஆனால் இத்தனைக் காலமாக எனது நண்பர்களுடன் கூடி திருநீற்றை யணியாமல் இருந்துவிட்டேன். இப்போது பூசினால் என்னை அவர்கள் இகழ்வார்கள். திருநீறு பூசுவதற்கு எனக்கு நாணமாக இருக்கின்றது. சிறிது காலம் போகட்டும்''

"பிராணேசா! ஒன்று செய்யுங்கள். திருநீற்றைத் தரித்த திருமுகத்தைத் தரிசித்த பிறகுதான் உணவு செய்வது என்று ஒரு கொள்கையைக் கடைப்பிடியுங்கள்''

இதற்கு மல்லப்பன் இசைந்தான். அவன் மனதில் மனைவி கூறிய உண்மைகள் விளக்கமாயின. காலையில் எழுந்து நெசவு நெய்யத் தொடங்குவான். அவனுடைய அடுத்த வீடு ஒரு குயவனாருடையது. அவர் சாளரத்தின் வழியாக மல்லப்பனிடம் மூக்குத்தூள் வாங்க வருவார். அக்குயவனார் எப்பொழுதும் நெற்றி நிறைய நீறணிந்திருப்பார். பொடிவாங்க அவர் சாளரத்திற்கு நேரேவந்தவுடன் அவரைப் பார்த்தவுடன் மல்லப்பன் நெசவுநெய்யும் மேடைமீது இருந்தபடி மனைவியைக் கஞ்சி கொணரச் செய்வான். அவள் கொடுத்த கஞ்சியைக் குடித்துவிட்டு பழையபடியே நெய்யத் தொடங்குவான். அதுபடியே குயவனார் மாலையில் வந்து பொடி கேட்பார். அவர் முகத்தைப் பார்த்ததும் இவன் மாலையுணவையுண்பான்.

இவ்வாறு ஆறுமாதங்கள் கழிந்தன. ஒருநாள் அக்குயவனாருக்குத் தெருவில் பொடி மட்டை ஒன்றுகிடைத்துவிட்டது. அதனால் அன்று பொடி கேட்க வரவில்லை. மல்லப்பனுக்கு மெத்தப்பசி. குயவனார் வருவார் வருவார் என்று சாளரத்தை எட்டிப்பார்த்த வண்ணமாக நெய்துகொண்டிருந்தான். சூரியன் உச்சிப்பொழுதை யடைந்தான். மல்லபபனுக்கு பசி தாங்கமுடியவில்லை. என்ன செய்வான் பாவம்! கொள்கையைவிட விரும்பவில்லை. பசி அவன் வயிற்றைச் சுட்டது.

செய்யும் மேடையை விட்டு இறங்கினன். குயவனர் குடிசைக்குப் போனன். அவர் பானைசட்டி செய்ய மண்ணெடுக்கும் பொருட்டு ஏரிக்குப் போயிருந்தார்.

மல்லப்பனுக்கு பசி ஒருபக்கம்; கொள்கை ஒருபக்கம். கொடிய வெய்யில்; பொடிசுடுகின்ற அக்கடுமையான வெய்யிலில் பசியுடன் ஓடி ஏரியை யடைந்தான். மண் எடுத்து எடுத்து ஏரியில் ஒரு புறம் பள்ளமாக இருந்தது. அப் பள்ளத்தில் இறங்கி குயவனர் மண்வெட்டியில் மண்ணை வெட்டிக் கொண்டிருந்தார். கணீர் என்ற சத்தம் கேட்டது. திகைத்தார். மீண்டும் மெல்ல வெட்டினர். அதற்குள் மூன்று செப்புக் குடங்கள் இருந்தன. அவைகளின் மேல் மூடியை எடுத்துப்பார்த்தார். பெரிய அளவுள்ள பொன் நாணயங்கள். அவர் உள்ளத்தில் அளவற்ற மகிழ்ச்சியுண்டாகியது. இதை யாராவது பார்த்துவிடுவார்களோ என்ற அச்சம் ஏற்பட்டது. மேலே நிமிர்ந்து பார்த்தார்.

அந்த சமயந்தான் மல்லப்பன் ஓடி குயவனருடைய திருநீறுதரித்த முகத்தைப் பார்த்துவிட்டு "பார்த்து விட்டேன்" என்று உரக்கச் சொல்லிவிட்டு ஓடினன். குயவனருக்குப் பெருங்கவலை ஏற்பட்டுவிட்டது. "கடவுள் கருணையால் நமக்குப் பொன் புதையல் கிடைத்தும், இந்த வேளையில் சனியனைப் போல் இவன் எங்கிருந்து வந்தான்? வந்தவனும் சிறிது கூடப் பொறுமையில்லாமல் பார்த்துவிட்டேன் என்று சொல்லிவிட்டு ஓடுகின்றனே; நமது கிராம மணியக்காரனிடம் கூறிவிடுவானே? மணியக்காரன் பேராசைக்காரனயிற்றே. முழுவதையும் பறித்துக்கொண்டு போய்விடுவானே. அன்றியும் அரசாங்கத்திற்குத் தெரிந்தால் ஆபத்தாயிற்றே? தெய்வமே! நீ தான் என்னைக் காப்பாற்றவேண்டும். உம்மைத் தவிர வேறு துணையில்லை. ஆண்டவனே! தாண்டவம் புரியவல்ல தனிப் பெருங்கருணைத் தெய்வமே!" என்று பலப்பலவாறு சிந்தித்தார். அதிவிரைவாக மூன்று குடங்களையும் எடுத்து வண்டியில் வைத்தார். மேலே குப்பை கூளங்களைப் போட்டு மூடினர். வண்டியை ஓட்டிக்கொண்டு வீட்டிற்குப் போனர்.

மல்லப்பன் குயவனரைப் பார்த்துவிட்டு ஓடியபோது வழியில் ஒருவர் சிலைகள் வேண்டும் என்று தமது வீட்டிற்கு அழைத்துப் போய் மாதிரி சிலையைக் காட்டி பதினறு முழத்தில் இத்தனை சிலை வேண்டும் என்று எழுதிக்கொடுத்தார். அதனல் நேரே வீட்டிற்கு வருவதற்குச் சுணங்கிவிட்டது. குயவனர் தன் வீட்டில் கொண்டுபோய் குடங்களை வைத்துவிட்டு, மெல்ல மல்லப்பன் வீட்டிற்கு வந்தார். அடுத்த வீடு தானே. மல்லப்பன் வீட்டில் இல்லை. அவருக்குச் சந்தேகம் வலுப்பட்டுவிட்டது. "ஓ ஓ, மணியக்காரரிடந்தான்

போயிருக்கவேணும். புதையல் தொலைந்தது" என்று அஞ்சினார். அவருக்கு அப்போது உண்டாகிய வேதனைக்கு அளவு ஏது? "அம்மா! சற்று நமது வீட்டிற்கு வாருங்கள்" என்று மதயந்தியை அழைத்துக்கொண்டு சென்றார்.

மதயந்திக்கு அப்புதையல்களைக் காட்டி "என் தாய்போன்ற அம்மா! உனக்குக் கோடி வணக்கம். நீ நல்ல புண்ணியவதி. கற்பு நெறி நின்ற காரிகை. இப் புதையல்கள் ஏரியில் மண் வெட்டும்போது கிடைத்தவை. நானோ பரம ஏழை. ஆண்டவன் தந்தான். உன் கணவனார் ஓடிவந்தார். வந்தவர் இதைப் பார்த்து விட்டு "பார்த்துவிட்டேன்" என்று கூறிவிட்டு ஓடினார். மணியக்காரரிடம் ஓடியிருப்பார்போல் தோன்றுகின்றது. மணியக்காரருக்குத் தெரிந்தால் பெரிய ஆபத்தாக முடியும். அன்னியர் கொண்டுபோவதைவிட நமக்குள் பங்கு வைத்துக் கொள்ளலாம். அம்மா! எடுத்த எனக்கு ஒரு குடம்; பார்த்த உன் கணவனுருக்கு ஒரு குடம். உனக்கு ஒரு குடம். இப்படி பங்கு வைத்துக்கொள்வோம். என்னமோ ஈசன் தந்ததை நமக்குள் நாமே எடுத்துக்கொள்வோம்" என்றார்.

மதயந்திக்கு மட்டற்ற மகிழ்ச்சி. "கணவனார் புதையலைக் கண்டிருக்க மாட்டார். அவர் திருநீற்றை மட்டும் பார்த்திருக்கவேண்டும். என்றாலும் வலியவந்து சிவபெருமான் தருகின்றார்" என்று கருதி, கண்ணுதற் கடவுளைப் போற்றி, இரண்டு குடங்களைக் கொண்டுவந்து தன் வீட்டில் தகுந்த இடத்தில் வைத்துப் பூட்டினாள்.

மல்லப்பன் வந்தான். அவனுக்கு அகோர பசி. "அடியே! உன்னால்தான் இத்தனைத் துன்பம். திருநீறு தரித்த முகத்தைப் பார்த்துவிட்டுதான் சாப்பிடவேண்டும் என்ற கொள்கையைக் கடைப்பிடிக்குமாறு நீ வற்புறுத்தினாய். நான் அதைக் கடைப் பிடித்தேன். அதனால் இன்று கொடிய வெய்யிலில் குயவனைத் தேடி ஏரிக்கு ஓடினேன். ஓடி அவனைப்பார்த்துவிட்டு வந்தேன். கொண்டுவா கஞ்சியை; பசி பொறுக்கமுடியவில்லை" என்றான்.

மதயந்தி மனதிற்குள் சிரித்துக்கொண்டு விரைந்துபோய் கணவனுருக்கு உணவுகொடுத்து உபசரித்தாள். ஒரு பொத்தல் விசிறியை எடுத்து விசிறினாள். மல்லப்பன் கஞ்சியைக் குடித்துவிட்டு நெய்வதற்காக நெசவு மேடையை அணுகினான். மதயந்தி கணவனை நோக்கி,

"பிராணபதி! ஏரிக்குப் போனீரே? அங்கு என்ன கண்டீர்?"

"ஏன்? அந்தக் குயவனுடைய திருநீறு பூசிய முகத்தைத் தான் கண்டேன்?"

"என் அன்பே! வேறு ஒன்றையுமே பார்க்கவில்லையா?"

"ஏண்டி! எனக்கு எரிச்சலைக் கிளப்புகின்றாய்? வேறு என்னத்தைப் பார்க்கச் சொல்லுகின்றாய்? எல்லாம் உன்னால் வந்த வேதனை தான். வேலையுங் கெட்டுப்போச்சு; பசியும் வந்து வாட்டியது. கொள்கையை விடக்கூடாது என்று வெய்யிலில் ஓடினேன்"

மதயந்தி கணவனை அழைத்து, அந்த அறையைத் திறந்து செப்புக் குடங்களில் நிறைந்துள்ள பொற் காசுகளைக் காட்டினாள். "ஏண்டி! இவைகள் ஏது?" என்று அவன் அதிசயத்துடன் கேட்டான். மதயந்தி நிகழ்ந்தவைகளைக் கூறினாள். "பிராணேசா! 'திருநீறு பூசிய முகத்தைப் பார்த்துவிட்டுத்தான் உணவு செய்வது' என்ற கொள்கையைக் கடைப்பிடித்து, அதன்படி நடந்ததனால் வந்த பயன் இது. ஆகவே இனி நீரே திருநீறு பூசி, திருக் கோயில் வழிபாடு செய்து இருமை நலன்களையும் ஒருமையில் பெறுவீர்" என்றாள்.

மல்லப்பனுக்கு மட்டற்ற மகிழ்ச்சி யுண்டாயிற்று. அன்று தொட்டு திருநீற்றுப் பதிகத்தை ஓதி திருநீறு பூசிக்கொள்வானுயினன். இரண்டு வேளையும் ஈசன் கோயிலுக்குச் சென்று வழிபட்டான். அவர்கள் புல் குடிசை மாடிவீடாக மாறியது. வறுமை விலகியது. அவர்கள் வீட்டில் எல்லோர் உடம்பிலும் சிறந்த ஆடையணிகலன்கள். உண்பது பாலடிசில். உறங்குவது பஞ்சசயனம். மதயந்தி கணவனுடன் சிவபத்தி செய்து திருநீற்றைப் பேணி இன்புற்றுவாழ்ந்தாள்.

ஸௌராஷ்ட்ர நீதி ஸம்பு

94. நம் சொந்த புத்திமதி நல்லதே. குருவின் புத்திமதி விசேஷமானது. விரோதியின் புத்திமதி நாசத்திற்கு ஹேதுவாகும். மனைவியின் புத்திமதி அவமானத்திற்கு ஆளாக்கும்.

95. பழக்கப்படாத மிருகம், எள்ளு, கரும்பு, கர்வி, தங்கம், தாசி, பேரிகை, கயவன் இவர்களை—இவைகளை அடித்துத் திருத்தினால் குணத்திற்குக் கொண்டு வரலாம்.

96. புஸ்தகமோ, பெண்ணோ, பணமோ பிறன் கைக்கு போய்விட்டால், உண்மையில் அவைகள் (கெட்டுப்) போய் விட்டமாதிரிதான். திரும்ப நம் கைக்கு வந்தாலும், புஸ்தகம் பாழாகியும், பெண் கெட்டுப் போயும், பணம் குறைந்தும் இருக்கும்.

97. உழுது உண்பவனுக்கு பஞ்சம் வராது. பகவானை பஜிப்பவனுக்கு பாபம் வராது. மௌனிக்கு வசவுமொழிவராது. ஜாக்ரதா அவஸ்தையில் இருப்பவனுக்கு இரவுஅச்சம் வராது.

உ

முருகா

நல்லகாலம்

"நல்லகாலம் வந்திருக்கின்றது;"

"எதற்கு? யாருக்கு?"

சைவவுலகிற்கும் தமிழ் மக்களுக்கும் மிகவும் நல்லகாலம் வந்துவிட்டது. உறங்கிக்கொண்டிருந்த மக்களுக்கு அறிவுக் கதிர் தோன்றிவிட்டது.

மதுரையிலே திருஞானசம்பந்த சுவாமிகள் திருமடாலயம் மிகவும் தொன்மையாயது. சமய குரவர் திருப்பேர்கொண்டது; ஞானசம்பந்த மூர்த்தியே தங்கியிருக்கப் பெற்றது. அது இத்தனைகாலம் இலைமறை காய்போல் விளக்கமில்லாமல் இருந்தது. இப்போதுள்ள ஆதீனகர்த்தர் 290 வது பட்டம். தமக்கு முதுமைப்பருவம் எய்திவிட்டபடியால் தக்கார் ஒருவரை நாடினர்.

எனது உழுவலன்பரும், சைவத்திற்காகவும் தமிழுக்காகவும் முழு நேரத்தையும் செலவழித்து உழைக்கவேண்டும் என்று பலகாலும் எண்ணியவரும், சீலமும் சிவநெறியும் உடையவருமாகிய, (குலசை) கொழும்பு. உயர்திரு. K.V. சோமசுந்தரம் அவர்களை அழைத்து 291-வது பட்டமாக விஜய வைகாசி 15-ந் தேதியன்று இளவரசு பட்டம் சூட்டினர்கள்.

வைகாசி 15, 16, 17 இந்த மூன்று நாட்களும் மதுரையில் ஒரு பெரிய நல்விழாவும் சொல்விழாவுமாக நிகழ்ந்தன. உயர்திரு. நாகர்கோயில் ஆறுமுகநாவலர் அவர்கள் முதலிய பல சைவ அறிஞர்கள் வந்து விரிவுரையாற்றி உடனிருந்து உழைத்து சிறப்புச் செய்தார்கள்.

ஒளிநெறி மன்றம் என்று ஒரு மன்றம் அமைத்துப் பணி புரிவது அன்பர்கட்குத் தெரிந்திருக்கும். அதனை **திருவருள் தவநெறி மன்றம்** என்ற பேரால் மாற்றியமைக்கப்பெற்றது. பதிவும் செய்யப்பெற்றது.

இம்மன்றத்திற்குத் தலைவர் இப்போது திருஞானசம்பந்தர் திருமடத்திற்கு இளவரசாக எழுந்தருளியுள்ள திருவருள் தவயோக சோமசுந்தரதேசிக பரமாசாரிய அடிகளார் ஆவார்.

இதற்குச் செயலாளர் : கிருபானந்தவாரி

துணைச் செயலாளர் : ஆறுமுக நாவலர்

பொருட்காப்பாளர் : ஜே. எம். குருநமசிவாயம்

இன்னும் பல உறுப்பினர்கள் உளர். இத் தவநெறி மன்றத்திற்கு விஜய வைகாசி 19-ம் தேதியன்று சிவத்திரு. திருவருள் தவயோக சோமசுந்தர தேசிகர் அவர்கள் மிகப் பெரிய கருணையுடனும் உவகையுடனும் ஐம்பதினாயிரம் ரூபாய் வழங்கினர்கள். ஒரே தடவையாகப் இத்துணைப் பெரிய உதவி அவர்கள் சைவவுலகிற்குச் செய்தார்கள். இதுமிகவும் பாராட்டு தற்கு உரியது.

இந்த நிதியைக் கொண்டு, இன்றியமையாத சைவ சாத்திரங்களை அச்சிட்டும், மோட்டார் வேன் ஒன்று வாங்கி ஒலிபரப்பி யமைத்து கிராமங்கள்தோறும் தக்க விரிவுரை யாளர்களை யனுப்பி தவநெறி மன்றத்திற்கு கிளை மன்றங்கள் நிறுவியும், சிவபக்தியை எங்கும் பரப்புதற்கு திட்டமிட்டிருக் கின்றனம்.

மற்றும் ஒரு மகிழ்ச்சிக்கு உரிய செய்தி. மதுரையில் வாழும் தருமகுணசீலர் உயர்திரு. S. S. சுப்பையாபிள்ளையவர்கள், முன் ஒருமுறை ஒளிநெறிமன்றத்திற்கு 1000-ம் நன்கொடை வழங்கினர்கள்.

இப்போதும் தவநெறிமன்றத்திற்கு (1001) ஆயிரத்தொன்று நன்கொடை மிகவும் அன்புடன் உதவினர்கள்.

அன்றியும் திருவாசகம் அச்சிட 1150-ம் உதவினர்கள். அடக்க விலையாக 0—4—0 விலையில் திருவாசகம் தவநெறி மன்றத்தின் முதல் வெளியீடாக அச்சிட்டு வெளி வந்துளது. இப்பெரும் புண்ணிய சிவப்பணியில் ஈடுபட்டுவரும் அன்புக் குரிய நமது தருமகுணசீலர் திரு. S. S. சுப்பையாபிள்ளையவர் கட்கு சைவவுலகம் நன்றிபாராட்டக் கடமைப்பட்டுளது. அவருக்கு எந்தை கந்தவேள் எல்லா நலன்களையும் அருளு வாராக.

இனி இப்போது உலகில் பரவிவரும் அறியாமையாகிய இருளை யகற்றி அறிவுநலமாகிய ஒளியைப் பரப்பி மக்களுக்கு இன்றியமையாத உதவிகளைப் புரிந்து மக்கட் பண்பை வளர்ப்ப தற்குத் தவநெறிமன்றம் அதிகமாகப் பாடுபட்டுப் பணி செய்யும்.

நன்மனம் படைத்த அன்பர்கள் அனைவரும் தங்கள் தங்கள் ஊரில் தவநெறி மன்றத்திற்குக் கிளை மன்றம் அமைத்தும், மன்றப் பிரசாரகர்களை அழைத்து மாதந்தோறும் சொற் பொழிவு நிகழச் செய்தும், மக்களுக்கு நல்ல பண்பைப் புகட்டி நற்பணி புரிந்து தலைமை மன்றத்துடன் ஒத்து உழைப்பார் களாக.

இன்னும் ஆக்கத்திற்குரிய உங்கள் கருத்துக்களை அறிவிப்பதாயின்,

செயலாளர்,
திருவருள் தவநெறி மன்றம்,
மதுரை.

என்ற முகவரிக்கு எழுதவும்.

எங்கும் நிறைந்தவரும் எல்லாம் வல்லவரும்; இன்ப அன்பின் வடிவினரும் ஆகிய இறைவனுடைய எல்லையில்லாத கருணையினால் திருவருள் தவநெறி மன்றம் முதலில் தமிழகம் முழுவதும் பரவி, பின்னர் ஏனைய நாடுகளிலும் பரவிப் பணி செய்தும், அடுத்து மேல் நாடுகளிலும் பணி செய்து, என்றும் குன்றாது நின்று ஓங்கி வளர்ந்து வளம் பெறுமாக.

அன்பன்,
கிருபானந்தவாரி.

அநுபவ முறை

கீழாநெல்லி: கீழாநெல்லியைச் சமூலமாகக் கொணர்ந்து அரைத்து மூன்று தோலா அளவை, ஒரு ஆழாக்குப் பசுவின் தயிரில் கலந்து தினந்தோறும் கற்பமுறையாக உண்டுவந்தால் மேகவெட்டையால் காணும் எல்லாப் பிணிகளும் ஒழியும்; ஆயுள் நீடிக்கும்.

கீழாநெல்லியிலையை உலர்த்தி இடித்த சூர்ணம்;

காலைமாலை தேனில் குழைத்து உண்டால் பித்தம் நீங்கி நல்ல பசி யுண்டாகும்.

துத்தி: துத்தியிலையைத் தூய தண்ணீரில் இரவு ஊறவைத்து, மறுநாள் காலை பிசைந்து இறுத்து பசுவின் பாலில் கலந்து அருந்தி வர இரத்த மூலம் நீங்கும்.

துத்தியிலை பச்சை, கிடையாத பட்சம் உலர்ந்ததை கஷாய மாகக் காய்ச்சி பாலும் சீனியும் சேர்த்து அருந்திவர மேகச் சூட்டையும் தேகச் சூட்டையும் தணிக்கும்.

துத்தியிலையுடன் பருப்பும் வெங்காயமுஞ் சேர்த்துக் கூட்டுக் கறியாகச் செய்து உணவுடன் அருந்திவர மலச்சிக்கல் நீங்கி உடல் நலந்தரும்.

துத்தி யிலையை அரைத்துப் பருக்களின் மீது தடவிவர பழுத்து உடையும்.

முருகா

வள்ளிமலை விழா

(அன்பன் மு. பெருமாள், வேலூர்)

வள்ளிமலை என்பது தமிழ்நாட்டின் எல்லைப் புறமான அதாவது வட ஆர்க்காடு ஜில்லாவின் வட எல்லையில் இருக்கின்றது. காட்பாடி ரயிலடியிலிருந்து பதினான்கு மைல்கள். வேலூரிலிருந்து பதினேழு மைல்கள். பஸ் வசதிகள் உண்டு. அதற்கு ரயிலடி திருவலம் என்பதாகும்.

வள்ளிமா தேவியாரின் வளர்ப்புத் தாதையாம் நம்பிராஜன் அரசாண்ட சித்தூர் வடக்கிலும்; மேல்பாடி என்ற சிவத்தலமும், நீவா நதியான பொன்னை நதியும் கிழக்கிலும்; பாடல் பெற்ற சிவத்தலங்களில் ஒன்றான திருவலம் தெற்கிலும், சரித்திர பிரசித்தி பெற்ற கோட்டை அரண்கள் நிறைந்த துருவமலைத் தொடர் மேற்கிலும் சூழ்ந்துள்ள இடையில் வள்ளிமலை அமைந்துள்ளது.

அடிவாரத்தில் ஆறுமுக சுவாமி ஆலயமும், அருமையான திருக்குளமும் உள்ளன; மலைமீது எத்தலத்திலுங் காணமுடியாத அமைப்பில் ஒரே கற்குண்டின் குகையில் கலியுக வரதரான கந்தவேள் பெருமான் ஸ்ரீ வள்ளி தேவசேனா சமேதராய் எழுந்தருளியுள்ளார். புத்தர் காலத்தில் ஏற்பட்ட சில பௌத்த மதச் சின்னங்களும் மலைமீது காணப்படுகின்றன. அம்பிகையின் ஞாபகச் சின்னங்களாக மலைமீது சூரிய ஒளி படாத, என்றும் வற்றாத சுனையும், மற்றும் சில சுனைகளும், மஞ்சள் பூத்த மலைக் குன்றுகளும், யானைக்குன்றும், ஆயலோட்டும் பரண்களும் காட்சியளிக்கின்றன. திருப்புகழ் சுவாமியார் ஆசிரமும் மலைமீதுள்ளது.

வேலூரில் பிரபல வைத்தியராக இருந்து வேண்டிய வருவாயும் புகழும் பெற்ற வைத்திய பூபதி டாக்டர் R. அப்பாதுரை அவர்கள், தன் சொந்த வாழ்க்கையான பந்த வாழ்க்கையில் விரக்தியடைந்து, வள்ளிமலை ஆண்டவருக்குத் தொண்டு செய்வதே தன் வாழ்க்கையின் லட்சியமாகக் கொண்டு, வயது முதிர்வையும் கருதாது அரும்பாடு பட்டு வருகின்றார். அவர் அன்பர்கள் பலருடைய ஆதரவைக் கொண்டு 1944ல் வள்ளிமலையில் படித் திருப்பணியைத் தொடங்கி 1947ல் கும்பாபிடேக விழாவுடன் சிறப்பாக முடித்துவைத்தார்.

அந்தத் திருப்படிகளில் ஒவ்வொரு தமிழாண்டின் இறுதியிலும், திருப்புகழ் பாராயண விழா நிகழவேண்டுமென்ற நல்ல கருத்துடன, வேலூர் வள்ளிமணாளர் திருப்புகழ் பாராயணச் சங்கத்தை நிறுவினார். இன்றைய தமிழுலகிலே ஓய்வின்றி திக்கெட்டிலும், கடல் கடந்தும் சென்று, திருப்புகழின் பெருமையைத் திறமையாக வெற்றிச் சங்கநாதமொடு முழக்கி,

வீரக் குரல் கொடுத்து, சமய உலகிலே சாத்மீகப் புரட்சியை எழுப்பி, யாவரையும் முருக பக்தியில் இணைக்க வைக்கும் இணையற்ற சொற்பொழிவாளர், உயர்திரு. திருமுருக கிருபானந்த வாரியார் அவர்களை மேற்படி சங்கத்திற்கு தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டது. இப் பெரியாரின் தலைமையில் நான்கு ஆண்டுகளாக வள்ளிமலையில் தமிழாண்டின் இறுதியில் திருப்புகழ் பாராயண விழா நிகழ்ந்து வருகின்றது.

ஆண்டு முழுவதும் நிகழ்ந்த வாணிபத்தின் வரவு செலவினங்களை ஆண்டின் இறுதியில் இருப்பு கட்டி, புதிய ஆண்டில் புதுக் கணக்குத் தொடங்குவது எதன் பொருட்டு? ஏற்கனவே ஏற்பட்ட லாபலோபங்களை அறியவும், இனி வருங்காலத்தில் எச்சரிக்கையாக யிருந்து வாணிபமாற்றவும், வியாபாரிகள். வகுத்த வழிமுறையாகும். அஃதே போன்று உலக வாழ்க்கையென்ற வியாபாரத்துறையிலே ஈடுபட்ட மக்களாகிய நாமும், ஒவ்வொரு ஆண்டின் இறுதியிலும் நம்முடைய வரவு செலவினங்களான நன்மை, தீமைகளைக் கணக்கிட்டு, இருப்பு கட்டிப் பார்த்தால்தானே, வருங்கால வாழ்க்கையை இனிதாய் இயக்கமுடியும்? இருப்பு காட்டிப்பார்க்காத வியாபாரமும், இருவினைகளை எண்ணித் தேராத வாழ்வும் எங்ஙனம் உருப்படும்.

ஆகவே அன்றுடம் நம்முடைய வாழ்க்கையில் நிகழ்ந்த இருவினைகளை எண்ணிப் பார்த்துத் தெளிவடைதல் அவசியமான கடமையாகும். அஃதில்லாதவர்கள் ஆண்டுக்கு ஒரு முறையேனும் கடந்த கால வாழ்க்கையில் நிகழ்ந்த இருவினைப் பயன்களை எண்ணி இறைவனிடம் முறையிட்டு அஞ்சலி செய்து, புதிய ஆண்டிலாவது புனிதமான வாழ்க்கை வாழ, பெருமானது பேரருளைப் பெற்றுச் செல்லட்டும் என்ற பேரவாவால், வள்ளிமலையில் ஒவ்வொரு தமிழாண்டின் இறுதியிலும் இந்த திருப்புகழ் படி விழா நிகழ ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

வள்ளிமலையில் நிகழும் இந்த விழா மிக முக்கியமானது. விசேடப் பலனும் அளிக்க வல்லது. ஆறுபடை வீட்டு மலைகளையும், அவனி முழுவதும் உள்ள மலைகளையும் விட, வள்ளிமலை தனிப்பட்ட பெருமைவாய்ந்தது. காரணம் மூவரும், தேவரும் மற்ற யாவரும் போற்றும் முழுமுதற் கடவுளான முருகப் பெருமான், மேலான திருவருளைப் பெற உலகமாதாவான வள்ளி எம்பெருமாட்டியார், தவங்கிடந்தது இந்த வள்ளிமலையில்தான். ஆண்டவன் அறுமுகப் பெருமான் ஆக்ஞைப்படி அம்பிகை அவதாரம் செய்ததும் இந்த வள்ளிமலையில்தான். அகிலாம்பிகையான வள்ளிமாதேவியார் அருள் பெற்றதும், ஆட்கொள்ளப்பட்டதும் இந்த வள்ளிமலையில்தான். இந்த உலகத்திலுள்ள வேறு எந்த மலைகட்கும் இப்பெரும் பேறு வாய்க்கவில்லை. எனவே இத்துணைப் பெருமை நிறைந்த எழிலான மலையில், திருமுருகப் பெருமானது திருப்புகழ் பாராயண விழா நிகழ்வது, எத்துணை இன்றியமையா நன்மை பயக்கும்

என்பதை எண்ணிப்பார்த்தல் வேண்டும். அம்பிகையே அருள் பெற்ற இந்த அற்புத வள்ளி வெற்பை, ஆன்மகோடிகளாகிய நாமும் எளிதில் இறைவனைப் பெற ஒரு சிறந்த தவப்பீடமாகக் கொள்ளலாமன்றோ?

மேலும் முருகப் பெருமானை வழிபடு தெய்வமாகக் கொண்ட அடியார்கள் இந்த உலகில் எங்கு இருப்பினும், அவர்கட்கு ஒரு சிறந்த தாய் வீடு ஒன்று உண்டாயின் அது இந்த வள்ளிமலைதான். எனவே எல்லா அடியார்களும், அவர்கள் கடல் கடந்த தீவுகளில் வாழ்பவர்களாயினும், தம் வாழ்நாளில் ஒரு முறையேனும் வள்ளி மலைக்கு வந்து சேவித்துச் செல்ல வேண்டியது, அவர்களது பிறவிப் பெருங்கடனாகும். உடல், உருவம், செயல், சிந்தனை, மொழி, பேச்சு ஆகியவற்றில் வேற்றுமை யுடையவர்களாக இருப்பினும், அவரது அடியார்களாகிய நாம் அனைவரும் நம் உள்ளத்தில் உபாசிப்பது அந்த முருகப்பெருமானை யன்றோ! எனவே செம்மான் மகளை ஆட்கொளவந்த செவ்வேள் சேவடி படர்ந்த வள்ளிமலையில், ஏனைய அடியவர்களும் ஒருங்கே குழுமி, இறைவழிபாடு நிகழ்த்த நந்தன—பங்குனி—28 29,30 ஆகிய மூன்று நாட்களிலும் ஏற்பாடு செய்யப்பட்டது.

முதல் நாள் விழாவில் திருப்பத்தூர் திரு. ராமநாத பாகவதர், பண்ருட்டி இசைச் செல்வர் திரு. P. A. ராஜசேகரன், இசைவேந்தர் புதுவை ஆ. விநாயக முதலியார் ஆகிய மூவர்களும் அரிய இன்னிசை விருந்தளித்துஅகமகிழச்செய்தார்கள்.

இரண்டாம் நாள் அங்கு குழுமிய அடியார்கட்கு சென்னை தருமகுண சீலர் திருமிகு T. M. ஏழுமலை செட்டியார் அவர்களால் அன்னதானம் அளிக்கப்பட்டது. காலையில் காஞ்சி மெய்கண்டார் கழகம் உயர் சைவத்திரு. வீ திருஞானசம்பந்த முதலியார் அவர்களும், ஒளிநெறி மன்ற விரிவுரையாளர், திரு. திருமாமணிசிவம் அவர்களும், திருப்புகழ் விளக்க வுரைகள் தெளிவாக நிகழ்த்தினார்கள். மாலை மதுரை முருகனருள்பெற்ற முனிவரர் திருமிகு. மாரியப்பசுவாமிகள் யாவர் மனமும் கரைந்துருக, இன்னிசை நிகழ்த்தி இன்புறவைத்தார். இம் மகிழ்ச்சிக்குத் துணையாக பிடில் திரு. கணேச பிள்ளை அவர்களும், மிருதங்கம் திரு. விஜயாங்கம் அவர்களும் இனிமையாக வாசித்தனர். இரவு 9 மணிக்கு மேல் தமிழ் நாட்டின் தவப் பெருஞ்சீலர் திருமுருக. கிருபானந்தவாரியார் அவர்கள் அரிய விரிவுரையாற்றி இறைவழிபாட்டின் மேன்மையை யாவரும் அறிய உருக்கமாய் உபதேசித்து மகிழ்வித்தார்.

மூன்றும் நாள் காலை, பிறந்த நாள் தொட்டு தினம் பெருமான் பெரும் புகழையே பேசும் பாக்யம் பெற்ற பேரறிஞரும், மறந்தும் பிறர் கேடு சூழா மாதவச் சீலரும், கறந்தபால் கன்னலொடு நெய் கலந்தாற் போன்ற கனிந்துரை கூறி கந்தனருள்

கூட்டுவிக்கும் கருணைப் பெரியார் உயர்திரு. திருமுருக. கிருபானந்தவாரியார் அவர்கள் தலைமையில், மதுரை திரு. மாரியப்ப சுவாமிகள் முதல் ஆயிரக்கணக்கான அடியார்கள் சூழ், திருப்படிகளில் திருப்புகழ் பாராயண விழா நிகழ்ந்தது. உள்ளங் கனிந்து, உரோமம் சிலிர்த்து, கண்ணீர் மல்கி, காதல் பெருகி, பெருமானது பேரருள் திருப்புகழை, படிகள் தோறும் கர்ப்பூர சோதி, பழம், தாம்பூல நிவேதனத்துடன் அவர் பாடிவந்த காட்சி, ஒரு ஆனந்தக் காட்சியாக இருந்தது. பார்ப்பவர்கள் மனதைப் பரவசப்படுத்தி பக்தியில் மூழ்கவைத்தது அந்தப் பேரின்பக் காட்சி.

அனைவரும் மலைமீதுள்ள ஸ்ரீவள்ளி தேவசேனா சமேதரான ஸ்ரீ சுப்பிரமணியப் பெருமானைச் சென்று சேவித்து ஆனந்த மெய்தினர். சங்கத்தாரின் வேண்டுகோளுக்கு அன்போடு இசைந்து மேற்படி சன்னிதியில், நித்தியத் திருப்புகழ் பாராயணம் நிகழ்த்த பொருளுதவிப் பொறுப்பை, அரக்கோணம் அன்பர் திரு. D. அரங்கசாமி நாயுடு அவர்கள் ஏற்றுக் கொண்டார். அன்பர் திரு. D. அரங்கசாமி நாயுடு அவர்கள் அறுமுகப் பெருமான் வழிபாட்டில் அளவற்ற ஆர்வம் உடையவர். பின்னர் மலைமீதுள்ள சன்னிதியில் மதுரை திரு. மாரியப்ப சுவாமிகள் அவர்களும், பேராசிரியர் திருமுருக. கிருபானந்த வாரியார் அவர்களும் நித்திய பாராயண விழாவைத் தொடங்கி வைத்தார்கள்.

வள்ளிமலையில் பின்வரும் திருப்பணிகள் நிகழவேண்டியிருக்கின்றன. அதற்கான செயற்குழுவை நமது பேராசிரியர் அவர்கள் தலைமையில் சில முக்கிய அன்பர்களைக் கொண்டு நிறுவப்பட்டது.

1 ராஜகோபுரம் கட்டுதல், 2 தேர் பழுதுபார்த்து திருத்தம் செய்தல், 3 வாகனங்களும், வாகன அறைகளும் அமைத்தல், 4 ஆதியிலிருந்த ஸ்ரீவள்ளிநாயகி சிலையை மீண்டும் அமைத்தல், 5 திருப்புகழ் தமிழிசை குருகுலம் நிறுவுதல். இந்த ஐம்பெருந் திருப்பணிகளைத் தகுதியுள்ள தனவந்தர்கள், குறிப்பாக சந்ததியில்லாத பெருஞ் செல்வர்கள் முறையாக ஒவ்வொருவர் ஒவ்வொரு பணிகளை ஏற்று நடத்திவைத்து, இம்மைக்கும், மறுமைக்கும் அழியாத இன்ப நலங்களை அடைய முந்துவார்களாக. இத்துடன் இந்த 5-வது ஆண்டு விழா இனிது முடிவுற்றது. இந்த வள்ளிமலை விழா சிறப்பாக நிகழ பெரிய சிறிய நன்கொடைகள் அளித்த பெரியார்களுக்கும், சிறப்பாக சேவை செய்த பேராசிரியர் அவர்கட்கும், சென்னை அன்பர் திரு. T. தண்டபாணி, வேலூர் K.G. அருணகிரி நாயகர், V.M. சுப்ரமணிய மேஸ்திரியார் முதலான அன்பர்கள் அனைவர்க்கும் வள்ளிமணவாளப் பெருமான் வற்றாத கருணை புரிந்து நல்வாழ்வு வழங்க இறைஞ்சுகின்றேன்.